# அறிவித்தல்

## பதவி வெற்றிடம் தொடர்பானது

### மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்

### வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள வவுனியா வடக்கு மற்றும் தீவகம் வலயக் கல்வி அலுவலகங்களின் வலயக் கல்வி பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புதல் - 2017

01. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள வவுனியா வடக்கு மற்றும் தீவகம் வலயக்கல்வி அலுவலகங்களில் வெற்றிடமாகவுள்ள வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு தற்போது வடக்கு மாகாணத்தில் கடமைபுரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவையிலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2017.09.20** ஆகும்.

02. **தகைமைகள்** :-

i. இலங்கை கல்வி நிருவாக சேவையிலுள்ள தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்.

*(இ.க.நி.சே தரம் II இல் உள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும், இ.க.நி.சே தரம் I இற்குரிய விண்ணப்பங்கள் எதுவும் கிடைக்கப்பெறாத சந்தர்பத்தில் இ.க.நி.சே தரம் II இல் உள்ள விண்ணப்பதாரிகள் குறித்த பதவிக்கான கடமை நிறைவேற்று அடிப்படையிலான நியமனத்திற்கே ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்)

ii. விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட தரத்தில் **2017.09.20** ஆந் திகதிக்கு உடன் முன்னரான **05** வருட செயலூக்கம் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதோடு, அக்காலத்தினுள் கிடைக்கவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன், எவ்விதத்திலான ஒழுக்காற்றுத் தண்டனை எதற்கும் ஆளாகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்ப முடிவுத்திகதியில் 60 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03. **ஆட்சேர்ப்பு முறை** :-

அறிவித்தலில் உள்ளவாறு தகைமைகளைக் கொண்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப்பெறும் விண்ணப்பதாரி இப்பதவிக்கு நியமிக்கப்படுவார்.

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக புள்ளிகள் வழங்கப்படும். (மொத்தம் 100 புள்ளிகள்)

i. தற்போதைய தரம் :- இ.க.நி.சே தரம் I **அல்லது** தரம் II (பொது) / தரம் II (விசேடம்)

*(அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் வழங்கப்பட்ட குறித்த பதவியுயர்வுக்கான நியமனக்கடிதத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்)

ii. கல்வித்தகைமை :- M.Ed / M.Phil, Post Graduate Degree / Diploma

iii. சேவைமூப்பு

iv. பதில் கடமை :- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

v. மொழித்தேர்ச்சி :- தாய் மொழி தவிர ஏனைய மொழிகளில் உள்ள தேர்ச்சி

vi. விசேட அடைவுகள் :- வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சி

vii. நேர்முகப்பரீட்சையின் போதான செயல்திறன்

04. **விண்ணப்பிக்கும் முறை** :-

இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைவாக, A4 அளவான தாளில் இரு பக்கங்களையும் மாத்திரம் பாவித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை **2017.09.20** ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், மாகாண பொதுச் சேவை**

**ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். **(விண்ணப்பத்தினை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக்கொள்ளவும்)** விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **பதவியின் பெயரைக்** குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும்.

உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. இப்பதவிக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும்போது வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும் என்பதோடு, இந்நியமனம் தொடர்பாக இங்கு குறிப்பிடாத விதிகள் சம்பந்தமாக ஏதாவது விடயம் இருப்பின், இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநருக்குரியதாகும்.

06. மாதிரி விண்ணப்பப்படிவம் **www.np.gov.lk -----> Recruitments and Exams** என்ற வடக்கு மாகாண இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சி.ஏ.மோகன்ராஸ்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
23.08.2017

(அலுவலக உபயோகத்திற்கு)

*மாதிரி விண்ணப்பபடிவம்*

# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள வவுனியா வடக்கு மற்றும் தீவகம் வலயக் கல்வி அலுவலகங்களின் வலயக்கல்வி பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புதல் – 2017

- விண்ணப்பிக்கும் வலயக் கல்வி அலுவலகம்

| இல | வலயக் கல்வி அலுவலகம் | தெரிவு |
|---|---|---|
| 01. | வவுனியா வடக்கு | |
| 02. | தீவகம் | |

(தெரிவு செய்யும் வலயக் கல்வி அலுவலகத்திற்கு எதிரே **"X"** என புள்ளடியிடுக)

01. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :

……………………………………………………………………………………………..

02. முகவரி : (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

i. அலுவலகம் : ………………………………………………………………………...

…………………………………………………………………………………………

ii. தனிப்பட்ட : ………………………………………………………………………....

…………………………………………………………………………………………

03. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

04. **2017.09.20** ஆம் திகதியன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

05. தேசிய அடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. தொலைபேசி இல :

i. அலுவலகம் : ……………………………………………………………….........

ii. தனிப்பட்ட : ……………………………………………………………….........

iii. தொலை நகல் (Fax) : ………………………………………………….......

07. சேவை விபரம் (முதல் நியமனத்திகதியிலிருந்து)

07.1 நியமிக்கப்பட்ட பதவி :..........................................................................................

07.2 முதல் நியமனத் திகதி :..........................................................................................

07.3 முதல் நியமனத் திகதியிலிருந்து மொத்த சேவைக்காலம் :..............................................

08. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

09. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

10. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்ட திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

11. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்ட திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

12. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் II பதவியில் 5 வருடங்கள் பூர்த்தியடைந்த திகதி:

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

13. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I பதவியில் 5 வருடங்கள் பூர்த்தியடைந்த திகதி:

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

14. தற்போது வகிக்கும் பதவி தொடர்பானது

14..1 தற்போது வகிக்கும் பதவி : ……………………………………………………......................

14.2 தற்போதைய தரம் :..........................................................................................................

14.3 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ………………………….....................

15. பதில் கடமையாற்றிருப்பின் விபரம் :

| சேவை நிலையம் | வகித்த பதவி | காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

16. கல்வித் தகைமைகள் : …………………………………………………..................................

17. மொழி தகைமைகள் (தாய் மொழி தவிர) :.........................................................................

18. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :-**

(அ) இவ்விண்ணபப்த்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள்யாவும் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இவ்நேர்முகப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

திகதி : …………………… ……..…………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

19. **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :-**

இத்திணைக்களத்தில் / அலுவலகத்தில் ........................................................................................ பதவியில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு / திருமதி / செல்வி …………………………………………………..................................... அவர்களின் விண்ணபத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................................................. ஆந் திகதியில் இட்டார் என்றும், அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் இவரின் ................. வருட சேவையில் இவருக்கு எதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இல்லை என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் அவருடைய பெயர்வழிக் கோவைக்கு அமைய சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :....................... ……..................................................

திணைக்களத்தலைவரின் கையொப்பம்

பெயர் : ……………………………………………………………...

பதவி : ……………………………………………………………....

முகவரி : ………………………………………………………….

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)